ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ சீதக்கடல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சீதக்கடல் ॥

## திருப்பாதாதிகேச வண்ணம்

‡சீதக்கடலுள்⋆ அமுதன்ன தேவகி⋆
கோதைக் குழலாள்⋆ அசோதைக்குப் போத்தந்த⋆
பேதைக் குழவி⋆ பிடித்துச் சுவைத்துண்ணும்⋆
பாதக் கமலங்கள் காணீரே⋆
பவள வாயீர்! வந்து காணீரே! (1)

முத்தும் மணியும்⋆ வயிரமும் நன்பொன்னும்⋆
தத்திப் பதித்துத்⋆ தலைப் பெய்தாற்போல் எங்கும்⋆
பத்து விரலும்⋆ மணிவண்ணன் பாதங்கள்⋆
ஒத்திட்டிருந்தவா காணீரே⋆
ஒண்ணுதலீர்! வந்து காணீரே! (2)

பணைத்தோள் இள ஆய்ச்சி⋆ பால் பாய்ந்த கொங்கை⋆
அணைத்தார உண்டு⋆ கிடந்த இப் பிள்ளை⋆
இணைக்காலில் வெள்ளித் தளை⋆ நின்றிலங்கும்⋆
கணைக்காலிருந்தவா காணீரே⋆
காரிகையீர்! வந்து காணீரே! (3)

உழந்தாள் நறுநெய்⋆ ஓரோர் தடா உண்ண⋆
இழந்தாள் எரிவினால்⋆ ஈர்த்தெழில் மத்தின்⋆
பழந் தாம்பால் ஓச்சப்⋆ பயத்தால் தவழ்ந்தான்⋆ *
முழந்தாள் இருந்தவா காணீரே⋆
முகிழ்முலையீர்! வந்து காணீரே! (4)

பிறங்கிய பேய்ச்சி⋆ முலை சுவைத்துண்டிட்டு⋆
உறங்குவான் போலே⋆ கிடந்த இப் பிள்ளை⋆
மறங்கொள் இரணியன்⋆ மார்பை முன் கீண்டான்⋆
குறங்குகளை வந்து காணீரே⋆
குவிமுலையீர்! வந்து காணீரே! (5)

மத்தக் களிற்று⋆ வசுதேவர் தம்முடைச்⋆
சித்தம் பிரியாத⋆ தேவகி தன் வயிற்றில்⋆
அத்தத்தின் பத்தாம் ஆள்⋆ தோன்றிய அச்சுதன்⋆
முத்தம் இருந்தவா காணீரே⋆
முகிழ்நகையீர்! வந்து காணீரே! (6)

இருங்கை மதகளிறு⋆ ஈர்க்கின்றவனைப்⋆
பருங்கிப் பறித்துக் கொண்டு⋆ ஓடும் பரமன் தன்⋆
நெருங்கு பவளமும்⋆ நேர்நாணும் முத்தும்⋆
மருங்கும் இருந்தவா காணீரே⋆
வாணுதலீர்! வந்து காணீரே! (7)

வந்த மதலைக்⋆ குழாத்தை வலிசெய்து⋆
தந்தக் களிறு போல்⋆ தானே விளையாடும்⋆
நந்தன் மதலைக்கு⋆ நன்றும் அழகிய⋆
உந்தி இருந்தவா காணீரே⋆
ஒளியிழையீர்! வந்து காணீரே! (8)

அதிரும் கடல்நிற வண்ணனை⋆ ஆய்ச்சி
மதுர முலை ஊட்டி⋆ வஞ்சித்து வைத்த⋆
பதறப் படாமே⋆ பழந் தாம்பால் ஆர்த்த⋆
உதரம் இருந்தவா காணீரே⋆
ஒளிவளையீர்! வந்து காணீரே! (9)

பெருமா உரலில்⋆ பிணிப்புண்டிருந்து⋆ அங்கு
இருமா மருதம்⋆ இறுத்த இப் பிள்ளை⋆
குருமா மணிப்பூண்⋆ குலாவித் திகழும்⋆
திருமார் பிருந்தவா காணீரே⋆
சேயிழையீர்! வந்து காணீரே! (10)

நாள்கள் ஓர் நாலைந்து⋆ திங்கள் அளவிலே⋆
தாளை நிமிர்த்துச்⋆ சகடத்தைச் சாடிப் போய்⋆
வாள் கொள் வளை எயிற்று⋆ ஆருயிர் வவ்வினான்⋆

தோள்கள் இருந்தவா காணீரே⋆
சுரிகுழலீர்! வந்து காணீரே! (11)

மைத் தடங்கண்ணி⋆ யசோதை வளர்க்கின்ற⋆
செய்த்தலை நீல நிறத்துச்⋆ சிறுப் பிள்ளை⋆
நெய்த்தலை நேமியும்⋆ சங்கும் நிலாவிய⋆
கைத்தலங்கள் வந்து காணீரே⋆
கனங்குழையீர்! வந்து காணீரே! (12)

வண்டமர் பூங்குழல்⋆ ஆய்ச்சி மகனாகக்⋆
கொண்டு வளர்க்கின்ற⋆ கோவலக் குட்டற்கு⋆
அண்டமும் நாடும்⋆ அடங்க விழுங்கிய⋆
கண்டம் இருந்தவா காணீரே⋆
காரிகையீர்! வந்து காணீரே! (13)

எம் தொண்டை வாய்ச் சிங்கம்⋆ வா என்றெடுத்துக் கொண்டு⋆
அந்தொண்டை வாய்⋆ அமுதாதரித்தாய்ச்சியர்⋆
தம் தொண்டை வாயால்⋆ தருக்கிப் பருகும்⋆ இச்-
செந் தொண்டை வாய் வந்து காணீரே⋆
சேயிழையீர்! வந்து காணீரே! (14)

நோக்கி யசோதை⋆ நுணுக்கிய மஞ்சளால்⋆
நாக்கு வழித்து⋆ நீராட்டும் இந்நம்பிக்கு⋆
வாக்கும் நயனமும்⋆ வாயும் முறுவலும்⋆
மூக்கும் இருந்தவா காணீரே⋆
மொய்குழலீர்! வந்து காணீரே! (15)

விண்கொள் அமரர்கள்⋆ வேதனை தீர⋆ முன்
மண்கொள் வசுதேவர்⋆ தம் மகனாய் வந்து⋆
திண்கொள் அசுரரைத்⋆ தேய வளர்கின்றான்⋆
கண்கள் இருந்தவா காணீரே⋆
கனவளையீர்! வந்து காணீரே! (16)

பருவம் நிரம்பாமே⋆ பாரெல்லாம் உய்யத்⋆
திருவின் வடிவொக்கும்⋆ தேவகி பெற்ற⋆
உருவு கரிய⋆ ஒளி மணிவண்ணன்⋆
புருவம் இருந்தவா காணீரே⋆
பூண்முலையீர்! வந்து காணீரே! (17)

மண்ணும் மலையும்⋆ கடலும் உலகேழும்⋆
உண்ணுந் திறத்து⋆ மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு⋆
வண்ணம் எழில்கொள்⋆ மகரக்குழை இவை⋆
திண்ணம் இருந்தவா காணீரே⋆
சேயிழையீர்! வந்து காணீரே! (18)

முற்றிலும் தூதையும்⋆ முன்கைம்மேல் பூவையும்⋆
சிற்றில் இழைத்துத்⋆ திரிதருவோர்களை⋆
பற்றிப் பறித்துக் கொண்டு⋆ ஓடும் பரமன் தன்⋆
நெற்றி இருந்தவா காணீரே⋆
நேரிழையீர்! வந்து காணீரே! (19)

அழகிய பைம் பொன்னின்⋆ கோல் அங்கைக் கொண்டு⋆
கழல்கள் சதங்கை⋆ கலந்தெங்கும் ஆர்ப்ப⋆
மழ கன்றினங்கள்⋆ மறித்துத் திரிவான்⋆
குழல்கள் இருந்தவா காணீரே⋆
குவிமுலையீர்! வந்து காணீரே! (20)

‡சுருப்பார் குழலி⋆ யசோதை முன் சொன்ன⋆
திருப் பாதகேசத்தைத்⋆ தென்புதுவைப் பட்டன்⋆
விருப்பால் உரைத்த⋆ இருபதோடொன்றும்
உரைப்பார் போய்⋆ வைகுந்தத்தொன்றி இருப்பரே! (21)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥